# எதிர்கால சுற்றுலா வளர்ச்சியில் உருத்திரபுரத்தின் வகிபாகம்

**ஜகுமார், பா. , சிவரூபி, ச.**
வரலாற்றுத்துறை (கலாசார சுற்றுலா), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
jakumarjakumar47@gmail.com

*இலங்கையானது நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டு இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமையப்பெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாடாகும். இந்நாட்டை பல அந்நியர்கள் ஆட்சி செய்ததன் விளைவினை பிரதிபலிக்கும் வகையிலான பல தொல்லியல் எச்சங்களை காணமுடிகின்றது. இந்தவகையில் இலங்கையின் வடமாகாணத்தில் சோழராட்சிக்குட்பட்ட வரலாற்றுத் தொல்லியல் மூலங்களை கொண்ட பிரதேசமாக உருத்திரபுரம் காணப்படுகின்றது. இப்பிரதேசமானது கிளிநொச்சி மாவட்டத்தில் இயற்கை எழில்கொஞ்சும் பசுமையான பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு வனவளம், நீர்வளம், நிலவளம் என இயற்கை வளங்களையும், இப்பிரதேசத்திற்கு உரித்தான பாரம்பரியமான விவசாயம், கைத்தொழில், மீன்பிடி, பாரம்பரிய உணவு வகைகள், பாரம்பரிய வீடமைப்பு முறைகள், பாரம்பரிய சடங்குகள், சம்பிரதாயம், விழாக்கள், நாட்டார் வழிபாடுகள், கூத்துகள் என இயற்கை சார்ந்தும் கலாசாரம் சார்ந்தும். தொட்டுணரக்கூடிய, தொட்டுணரமுடியாத தனித்துவமான மரபுரிமை அம்சங்களை கொண்டு விளங்குகின்றது. இவ்மரபுரிமை வளங்களினை சுற்றுலா நோக்கில் முறையாக பயன்படுத்துவதன் ஊடாக, இப்பிரதேசத்தினை ஒரு சுற்றுலா மையமாக மாற்றமுடியும். மேலும் இப்பிரதேசத்தின் வளங்களும் மரபுரிமைகளும் பாதுகாக்கப்பட்டு எதிர்கால சந்ததியினரும் நன்மை பெற முடியும். இதனடிப்படையில் இப்பிரதேசமானது பல்வேறு வளங்களையும், கலாசார மரபுரிமை அம்சங்களையும் கொண்டமையப்பெற்ற போதிலும் இதுவரை சுற்றுலா நோக்கில் கருத்தில் கொள்ளப்படவில்லை. இதனால் இப்பிரதேசத்தினை எதிர்கால சுற்றுலாவில் மேம்படுத்தும் நோக்கில் இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளது. இதனூடாக உருத்திரபுரம் பிரதேசத்தின் இயற்கை வளங்கள் மற்றும் தனித்துவமான கலாசார பாரம்பரியங்களை அடையாளப்படுத்தி, அதனை சுற்றுலா நோக்கில் பயன்படுத்துவதற்கான திட்டங்களை வெளிப்படுத்துவதும், அதற்கான சவால்களை இனங்காண்பதும் இவ்வாய்வின் நோக்கங்களாகும். இவ்வாய்வு நோக்கங்களினை நிறைவு செய்வதன் பொருட்டு, ஆய்வுக் குரிய முதல் நிலைத் தரவுகள் களஆய்வு, நேர்காணல்கள் ஊடாக திரட்டப்பட்டுள்ளன. அத்துடன் இரண்டாம் நிலைத்தரவுகள் இப்பிராந்தியம் தொடர்பாகவும், சுற்றுலா தொடர்பாகவும் வெளிவந்த இலக்கியங்கள், நூல்கள், கட்டுரைகள் என்பவற்றிலிருந்து பெறப்பட்டுள்ளன. இதனூடாக உருத்திரபுரம் பிரதேசத்தினதும், அதன் சுற்றாடலிலும் காணப்படும் மரபுரிமை அம்சங்களும் அடையாளப்படுத்தப்படுவதுடன், இதுவரை மரபுரிமை அம்சங்கள் சுற்றுலாவில் முதன்மைப்படுத்தப்படாமைக்கான காரணங்களும் இனங்காணப்பட்டுள்ளன. இதற்கான தீர்வுகளை இனங்கண்டு இப்பிரதேசத்தை சுற்றுலா ரீதியாக வளப்படுத்தும் போது, இப்பிரதேசத்தின் மரபுரிமை வளங்கள் பாதுகாக்கப்படுவ*